**Starting time 11.49 A.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 351/2002**

Deposition of **D.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 02.08.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்ரமணியன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : எனது தகப்பனார் பெயர் முத்துகுமார் என்றால், இல்லை, முத்து கவுண்டர். என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை எங்கு, யார் தயாரித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனது வழக்கறிஞர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு அங்குதான் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை யார் சொன்னார்கள் என்றால், என் வழக்கறிஞர்தான் சொன்னார். எனது அக்காவின் பெயர் செல்லம்மாள் என்றால், ஆமாம். செல்லம்மாளின் மகன்தான் சுப்ரமணியம் என்றாலும், சுப்ரமணியம் மனைவி பெயர் சுந்தரி என்றாலும், ஆமாம். சுப்ரமணியத்துக்கு நான் சொந்த தாய்மாமன் என்றால், ஆமாம்.

2. என்னுடைய தோட்டம் சிவசங்கராபுரம் கிராமத்தில் மாப்பிள்ளைக் கவுண்டர் தோட்டத்திற்கும், வாத்தியார் தோட்டத்திற்கும் இடையில் உள்ளது என்றால், ஆமாம். என்னுடைய தோட்டத்திற்கு சிவசங்கராபுரம் கிராமத்தின் வழியாகத்தான் செல்ல முடியும் என்றால், அதன் வழியாகவும் வரலாம், தேவியாகுறிச்சி கிராமத்தின் வழியாகவும் வரலாம். மணி, ஆறுமுகம், பெரியசாமி காட்டிலிருந்து சிவசங்கராபுரம் வழியாக எனது தோட்டத்திற்கு செல்ல 3 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால், 1 கி.மீ. தொலைவுதான் இருக்கும். எனக்கு மணி, ஆறுமுகம்,

பெரியசாமி காட்டிற்கு பக்கத்தில் காடு இல்லை என்றால், ஆமாம். சுந்தரி, முத்தமாள் மற்றும் ஆறுமுகம் ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்ற ஆவணத்தில் நான் சாட்சி போடவில்லை என்றால், ஆமாம். தாவா சொத்தின் பட்டா எண், புல எண் எனக்கு தெரியுமா என்றால், புல எண் 72/17, பட்டா எண் தெரியாது. தாவா சொத்து சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை ஆவணங்களை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால், தாவா சொத்திற்கு பட்டா கிடையாது மற்ற ஆவணங்களையும் நான் பார்த்தது இல்லை.

3. தாவா சொத்தை அளக்க நீதிமன்ற ஆணையர் இரண்டு முறை வந்தபோது நான் உடன் இருக்கவில்லை என்றால், ஆமாம். தாவா சொத்தை அளவீடு செய்தபோது நான் உடன் இல்லை என்றால், ஆமாம், என்னிடம் சொன்னார்கள். யார் சொன்னார்கள் என்றால், எனது அக்கா மகன் சுப்ரமணியம் சொன்னார். புல எண் 72/17-ல் தென்னைமரமும், வரப்பும் மட்டும்தான் உள்ளது என்றால், இல்லை, வரப்பு மட்டும்தான் உள்ளது. 2, 3 பிரதிவாதிகளும் சுந்தரியும் எந்த சர்வே எண்ணில் இருந்து எந்த சர்வே எண்ணிற்கு தடம் போகிறார்கள் என்று தெரியுமா என்றால், சர்வே எண் தெரியாது, ஆனால் போவது தெரியும். 3-ம் பிரதிவாதியின் நிலத்திற்கும் 2-ம் பிரதிவாதி சுந்தரிக்கு விற்ற நிலத்திற்கும் இடையே ஓடை உள்ளது என்றால், ஆமாம். அந்த ஓடை எவ்வளவு அடி பள்ளத்தில் இருக்கிறது என்றால், சுமார் 4 அல்லது 5 அடி இருக்கும். ஓடையை கடந்து போவதற்கு பாலம் எதுவும் இல்லை என்றால், ஆமாம். ஓடை நான் சொல்வதுபோல 4, 5 அடி ஆழம் இல்லை என்றாலும், 20, 30 அடி ஆழத்தில் இருக்கிறது என்றாலும், சரியல்ல.

4. 2, 3 பிரதிவாதிகளுக்கும், சுந்தரிக்கும் புல எண் 72/17-ல் எக்காலத்திலும் தடம் இருந்ததும் இல்லை, அவர்கள் அதை பயன்படுத்தியது இல்லை என்றால், சரியல்ல, தடம் இருந்தது. அக்கம் பக்கத்தினர் யார் அதில் சென்றார்கள் என்பது குறித்து அவர்களின் பெயர்களைச் சொல்ல முடியுமா என்றால், முடியாது, நபர்களைத்தான் தெரியும். புல எண் 72/17 ஆனது தேவியாகுறிச்சி கிராமத்திலிருந்து 2, 3 கி.மீ. தொலைவில் உள்ளது என்றால், இல்லை 1-/12 கி.மீ. தான் இருக்கும். 3-ம் பிரதிவாதியின் நிலத்திற்கு தெற்கில் தலைவாசல் ஏரி வாய்க்கால் உள்ளது என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. சுந்தரி நிலத்திற்கும், 3-ம் பிரதிவாதி நிலத்திற்கும் மேற்கில் சிவசங்கராபுரம், மணிவிழுந்தான் செல்லும் பாதை இருக்கிறது என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது.

5. ராஜாமணி என்பவர் சுப்ரமணியத்தின் அண்ணன் மனைவி என்றால், ஆமாம். ஓடைக்கும் ராஜாமணி நிலத்திற்கும் இடையே ஒரு பாதை செல்கிறது என்றால், இல்லை. ராஜாமணி நிலத்திற்கும் ஓடைக்கும் இடையே ஒரு பாதை இருக்கிறது என்றாலும், அதைத்தான் ராஜாமணி, சுந்தரி மற்றும 3-ம் பிரதிவாதியும் அனுபவித்து வருகிறார்கள் என்றால், இல்லை, அது ஓடை. சுந்தரியும், 3-ம் பிரதிவாதியும் அவர்கள் நிலத்திற்கு மேற்கில் உள்ள சிவசங்கராபுரம் செல்லும் பாதையைத்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், ஆமாம். புல எண் 72/17 என்ற புல எண்ணே இல்லை என்றாலும், 2004-லேயே அது ரத்து செய்யப்பட்டுவிட்டு ஓடை புறம்போக்காக அது வைக்கப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

6. புல எண் 72/17-ல் கிழமேலக என்றுமே பாதை செல்லவில்லை என்றாலும், அது விவசாய நிலமாகத்தான் இருந்தது என்றாலும், சுந்தரி, சுப்ரமணியம், 2, 3 பிரதிவாதிகளும் சேர்ந்து பாதையாக உருவாக்கிவிட்டார்கள் என்றால், சரியல்ல, பாதை இருந்தது. பாதை இல்லாததால்தான் புல எண் 72/17 ரத்து செய்யப்பட்டது என்றால், சரியல்ல. கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகத்திற்கு சென்று புல எண் 72/17-ன் புல வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால், இல்லை, என்னிடம் காட்டினார்கள். கிராம நிர்வாக அதிகாரி அலுவலகத்திலும்புல எண் 72/17-ல் பாதை செல்வதாக மோசடியாக தயாரிகப்பட்ட ஆவணத்தைதான் என்னிடம் காட்டினார்கள் என்றால், சரியல்ல. சுந்தரி, மருதை மற்றும் 3-ம் பிரதிவாதி மாற்று பாதை வழியாகத்தான் செல்கிறார்கள் என்றாலும், ஓடையை கடந்து அவர்களுக்கு பாதை இல்லை என்றாலும், சரியல்ல. பெரியசாமி, மணி, ஆறுமுகம் ஆகியோர் எந்தெந்த தேதிகளில் சிறுக சிறுக பாதையை அழித்தார்கள் என்ற தேதி தெரியுமா என்றால், தேதி தெரியாது, ஆனால் அழித்துவிட்டார்கள். நான் சொல்வது போல் பாதையும் இல்லை அவர்கள் அதை அழிக்கவும் இல்லை என்றால், சரியல்ல.

7. புல எண் 72/17-ஆனது தீர்வை ஏற்படுத்தப்பட்ட தரிசு நிலமாக இருந்த போதும் ஓடை புறம்போக்காக இருந்த போதும், மணியின் அனுபவத்திலும், அவரின் மூதாதையர் அனுபவத்திலும் இருந்து வந்தது என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை யார் யார், யார் யார் பெயரில் என்ன பரிகாரத்துக்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், தடத்திற்காகத்தான் போட்டுள்ளார்கள், மணி, ஆறுமுகம், பெரியசாமி பெயரில் போட்டுள்ளாகள்.

புல எண் 72-ல் உள்ள நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமானது என்றாலும், 351/2002 வழக்கில் வாதிகளுக்கு நீண்ட அனுபவம் பாத்தியம் மூலம் பாத்தியப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் அது அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்து இல்லை என்றாலும், அரசாங்கத்தின் உரிமை அற்று போய்விட்டது என்றாலும், சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலம் என்னுடைய உறவினரான சுப்ரமணியன் சொன்ன சங்கதிகளைக் கூறிதான் தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. புல எண் 72-ல் 60 ஆண்டு காலமாக தடமாக பயன்படுத்தி வருவதாக பொய் சொல்லகிறேன் என்றால், பொது மக்கள் பயன்படுத்தி வந்தது உண்மைதான். எனக்கு தாவா சொத்தின் சர்வே எண் குறித்தும், மற்ற விவரங்கள் குறித்தும் எதுவும் தெரியாது என்றாலும், எனது உறவினர் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.25 P.M.

(ஒப்பம்/- என்.திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆத்தூர்.